கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 14.03.2025

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் RKVY-RAFTAAR-R-ABI- SAIP மற்றும் NIDHI-PRAYAS-ன் மானியம் வழங்கும் விழா

மத்திய அரசின் தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை - (GOI-DST) நிதி உதவியுடன் இயங்கிவரும் தொழில்நுட்பவணிக காப்பகமானது வேளாண் சார்ந்த தொழில் முனைவோர்கள், விவசாயிகள், மாணவர் தொழில் முனைவோர்களுக்கு வழிகாட்டியாக 2011 முதல் திகழ்கிறது.

மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகத்தின் கீழ் RKVY-RAFTAAR-R-ABI- SAIP மற்றும் NIDHI-PRAYAS-ன் மானியம் வழங்கும் விழா மார்ச் 13, 2025 தேதியன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவணிக காப்பகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர்.V.கீதாலட்சுமி அவர்கள் தலைமை தாங்கி மானியங்களை வழங்கினார். மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகத்தின் வேளாண் துளிர் நிறுவனங்களுக்கான SAIP Cohort – IV 10 மானியதாரர்களுக்கு ரூபாய்.81.60 இலட்சம் மானியம் வழங்கினார்.

மத்திய அரசின் தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை - (DST) நிதி உதவியுடன் NIDHI - PRAYAS திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 தொழில் முனைவோர்களுக்கு தலா ரூ10.00 இலட்சம் மானியம் இரண்டு தவணையாக வழங்கப்படும். முதல் தவணை மானியமாக 30.00 இலட்சம் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பதிவாளர் முனைவர் R.தமிழ்வேந்தன் அவர்கள், வேளாண் வணிக மேம்பாட்டு இயக்கக இயக்குநர் முனைவர்.E.சோமசுந்தரம், செயல் இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி திரு.A.V.ஞானசம்பந்தம் மற்றும் ABIS செயற்குழு உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

இவ்விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர்.V.கீதாலட்சுமி அவர்கள் அவர் தனது உரையில் இளம் பட்டதாரிகளை வேளாண்மை சார்ந்த தொழிலில் ஈடுபடுத்துவதன் முக்கியத்துவம் மற்றும் நிலையான மற்றும் இலாபகரமான விவசாய வணிகத்திற்காக புதிய தொழில்நுட்பங்களை புதுமைப்படுத்தவும் செயல்படுத்தவும், விவசாயம் சார்ந்த தொழில் முனைவோர்களை வழிகாட்டும் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினார்.

இத் திட்டத்தின் கீழ் மானியம் பெற்ற தொழில்முனைவோர்கள் தங்கள் மானியத்தை வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த தயாரிப்பு பொருட்களை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தி கொள்வர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**